Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR. R.SATHYANARAYANAN, Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jnrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 19 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 130

மேகதாது அணைத் திட்டத்துக்கு எதிர்ப்பு: மத்திய ஜல் சக்தி அமைச்சரிடம் தமிழக அமைச்சர்கள் வலியுறுத்தல்

சென்னை – 19 நவம்பர், 2026 காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு முன்மொழிந்துள்ள சமநிலை நீர்த்தேக்கத் திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையை (DPR) பரிசீலிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி, தமிழக அமைச்சர்கள் குழு புதன்கிழமை புதுதில்லியில் மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீலைச் சந்தித்து விரிவான மனு அளித்தது.

ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த், பொதுப்பணித் துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆகியோர் மத்திய அமைச்சரைச் சந்தித்து மனுவை அளித்தனர்.

சந்திப்புக்குப் பிறகு புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஆனந்த், மேகதாது சமநிலை நீர்த்தேக்கத் திட்டத்துக்கு மத்திய அரசு எந்தவித அனுமதியும் வழங்கக் கூடாது என்று வலியுறுத்தியதாகத் தெரிவித்தார். தமிழகத்தின் உரிமைகளைச் சட்டரீதியாகப் பாதுகாப்போம் என்றும் அவர் உறுதியளித்தார்.

காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பாக 2018ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இறுதியானது என்பதை மத்திய அமைச்சரிடம் எடுத்துரைத்ததாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறினார். இந்த விவகாரம் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; கேரளம், புதுச்சேரி உள்ளிட்ட காவிரி நீரைச் சார்ந்த பிற மாநிலங்களுக்கும் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.